## பழனி நில விவகாரம்: அவதூறு பரப்பியதற்காக நிபந்தனையற்ற மன்னிப்பு -

# ரூ.10 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும்!

## விகடன் குழுமத்திற்கு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி நோட்டீஸ்!

சென்னை, ஜூலை 22 -

தன்மீது அவதூறு பரப்பும் நோக்கில் வீடியோ மற்றும் செய்தி வெளியிட்டுள்ள விகடன் குழுமத்தின் மீது நிபந்தனை யற்ற மன்னிப்பு கோரியும் 10 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென நஷ்ட வழக்கு தொடர்ந்திட முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான அர.சக்கரபாணியின் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

தி.மு.க. முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான அர. சக்கரபாணி அவர்கள் மீது அவதூறுபரப்பும்நோக்கில்வீடியோ மற்றும் செய்தி வெளியிட்டுள்ள விகடன் குழுமத்தின் மீது மான நஷ்ட வழக்கு தொடுப்பது தொடர்பாக 19.07.26 அன்று அர.சக்கரபாணி சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்குச் சொந்தமான, சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள 1.35 ஏக்கர் நிலத்தை ஒரு தனியார் அறக்கட்டளை தங்களுக்கு சொந்தமானது என்று கூறி, கடந்த மார்ச் 2026ல் டி.சேதுபதி மற்றும் கே. வெள்ளத்துரை ஆகிய இரு நபர்களுக்கு வெறும் 2 கோடி ரூபாய்க்கு முறைகேடாக பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளது.



இந்த நிலப் பதிவு தொடர்பாக அண்மையில் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பின்படி, அந்த முறைகேடான விற்பனைப் பத்திரம் ரத்து செய்யப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. இந்த விவகாரத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி முறையான விசாரணையை வலியுறுத்தி உள்ளது.

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பரந்தாமன் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பழனி கோவில் நில மோசடி விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், இந்த விவகா ரத்தில் உண்மை குற்றவாளிகளையும், உயர் அதிகாரிகளையும் காப்பாற்றும் நோக்கோடும், பொதுமக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் வகையிலும் விகடன் டிவியின் யூடியூப் பக்கத்தில் கடந்த ஜூலை 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் முன்னாள் அமைச்சர் சக்கரபாணியை தொடர்புபடுத்தி அவதூறு வீடியோக்கள் வெளியிடப்பட்டன.

மேலும், ஜூனியர் விகடன் இதழில் (தேதி: 22.07.2026) 'பழனி நில சர்ச்சை... சக்கரபாணிக்கு சிக்கல்' என்ற தலைப்பில் முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி யின் புகைப்படத்துடன் அவதூறான கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில்,

நிலத்தை வாங்கியவர்களோடு அர. சக்கரபாணி அவர்களை தொடர்பு படுத்தி எவ்வித ஆதாரமுமின்றி அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. நிலத்தை வாங்கியதாகக் கூறப்படும் வெள்ளத்துரை மற்றும் சேதுபதி ஆகிய நபர்கள் யார் என்று கூட தெரியாது என முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இந்த விவகாரத்தில் விகடன் செய்தியாளர் தொடர்பு கொண்டு கேட்டபோதே இக்குற்றச்சாட்டுகளை அவர் மறுத்திருந்தார். இருப்பினும், அடிப்படை ஊடக அறத்தை மீறி, அவரது மறுப்பை பிரசுரிக்காமல் திட்ட மிட்ட உள்நோக்கத்துடன் இந்த அவதூறு பரப்பப்பட்டுள்ளது.

ஆகவே விகடன் குழுமமானது யூடியூப் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரு அவதூறு வீடியோக்களையும் உடனடியாக நீக்க வேண்டும். ஜூனியர் விகடன் இதழின் பிரசுரிக்கப்பட்ட அவதூறு கட்டுரையைத் திரும்பப் பெற வேண்டும் மற்றும் விற்க ப்படாத இதழ்களை உடனடியாக அழிக்க வேண்டும்.

அடுத்த ஜூனியர் விகடன் இதழின் அட்டைப் பக்கத்திலும், இணையதளத்திலும் முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணியிடம் நிபந்தனையற்ற பகிரங்க மன்னிப்பு கோரி செய்தி வெளியிட வேண்டும். அவரது நற்பெயருக்குக் களங்கம் விளை வித்ததற்காக ரூ. 10 கோடி (பத்து கோடி ரூபாய்) இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும், இந்த வழக்கறிஞர் நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் இக்கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினால், விகடன் குழுமத்தின் மீதும், சம்பந்தப்பட்ட செய்தியாளர்கள் மீதும் உரிய சிவில் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியாக பேரணியில் ஈடுபட்டிருந்த

# CJP இளைஞர்கள் மீது தாக்குதல் - அதிர்ச்சியளிக்கிறது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



**சென்னை,ஜூலை.22 -**

**நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியாக பேரணியில் ஈடுபட்டிருந்த CJP இளைஞர்கள் மீது தாக்குதல் - டெல்லியில் இருந்து வரும் காட்சிகள் அதிர்ச்சியளிக்கின்றன என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**சட்டமனற் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:**

நீட் (NEET) தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியான முறையில் பேரணியில் ஈடுபட்டிருந்த CJP அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் மீது காவல்துறை காட்டிய அடாவடித்த னத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

டெல்லியிலிருந்து வரும் காட்சிகள் அதிர்ச்சியளிக்கின்றன.

அவர்களின் கவலைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, அரசு தனது காவல்துறையைக் கொண்டு ஒடுக்குமுறையை மேற்கொள்கிறது. ஜனநாயகத்தில் இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று திமுக வலியுறுத்தி வருகிறது.

இன்று, நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டின் குரல், நாட்டின் தலைநகரம் உட்பட நாடு முழுவதும் எதிரொலிக்கிறது.

நாட்டு இளைஞர்களின் கோரிக்கை தெளிவானது. அவர்களின் குரலுக்குச் செவிசாயுங்கள். #BanNEET

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டார்.

## சி.ஜே.பி. ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்றம் நோக்கி பேரணியில் பங்கேற்ற

# மாணவர்கள் - இளம் போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்துவதா?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை,ஜூலை 22 -

சி.ஜே.பி. ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்றப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள், போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தடியடிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

சி.ஜே.பி. ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்றப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் இளம் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தடியடியை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நமது கல்வி முறையில் உள்ளதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்த தீவிரமான கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, மத்திய பா.ஜ.க. அரசு பேச்சு வார்த்தைக்குப் பதிலாக மிருகத்தனமான வன்முறையைப் பயன்படுத்தத் தேர்ந்தெடுத்துள்ளது.



இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை! கீழையூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ரவிச்சந்திரனை தாக்கிய

# த.வெ.க. நிர்வாகியை கைது செய்யாத காவல்துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கண்டன உரை!

நாகை, ஜூலை 22 -

நாகை மாவட்டம் கருங்கண்ணி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக துணை செயலாளர் ரவிச்சந்திரனை கருங்கண்ணியை சேர்ந்த சிந்தாமணி அரசு நியாய விலை கடையில் விற்பனையாளராக பணிபுரியும் தவெக கட்சியை சேர்ந்த வெண்மணி என்பவர் காரணம் எதுவும் கூறாமல் கருங்கண்ணி ஊராட்சியில் தவெக தவிர வேறு எந்த கட்சியினரும் இருக்கக் கூடாது என்று கூறி கடந்த ஜூலை 15ஆம் தேதி மேலப்பிடாகை கடை தெருவில் ரவிச்சந்திரன் டிபன் வாங்க வந்த போது வெண்மணி மற்றும் அவரது சகோதரர்களான சிவராமன் மற்றும் ராஜா ஆகிய மூவரும் இரும்புக் கம்பியால் தாக்கியதால் பலத்த காயத்துடன் ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் ரவிச்சந்திரன் ஒரத்தூரில் உள்ள நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



மேலும் ரவிச்சந்திரன் தவெக கும்பலால் தாக்கப்பட்ட வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி பரபரப்பு ஏற்படுத்தி உள்ள நிலையில், வெண்மணி உட்பட மூவர் மீது கீழையூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வெண்மணி நாகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். வெண்மணிக்கு இரண்டு போலீசார் பாதுகாப்பில் இருந்துள்ளனர். இந்நிலையில் காவல்துறையினர் வெண்மணியிடம் உன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது மருத்துவர்கள் உங்கள் உடலில் எந்த பாதிப்பும் இல்லை என்று கூறிவிட்டனர் அதனால் நாளை காலை வரை மருத்துவமனையில் இல்லாமல் நள்ளிரவே மருத்துவமனையில் இருந்து ஓடிவிட காவல் துறையினர் அறிவுறுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து வெண்மணி மருத்துவமனையில் இருந்து போலீசார் பாதுகாப்பில் இருந்த போது தப்பியதாக கூறப்படுகிறது. இதற்கு போலீசார் அலட்சியமே காரணம் எனக்கூறி கழக ஒன்றிய துணைச் செயலாளர் ரவிச்சந்திரனின் உறவினர்கள் மற்றும் அப்பகுதி கழகத்தினால் கடந்த 18ம் தேதி நாகைதிருத்துறைப்பூண்டி கிழக்கு கடற்கரை சாலையில் மேலப்பிடாகை கடைத் தெருவில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் காவல்துறையினர் எந்த நடவடிக்கை எடுக்காத நிலையில் வெண்மணி உள்ளிட்ட 3 பேரையும் கைது செய்யாத காவல்துறை கண்டித்து கீழையூர் கீழக்கு ஒன்றிய திமுக சார்பில் மேலப்படாகை கடை தெருவில் கீழையூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டதில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.கௌதமன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகவும், குற்றவாளியை தப்பிக்க விட்ட காவல்துறையை கண்டித்ததுடன் ஒன்றிய கழக துணை செயலாளர் ரவிச்சந்திரன் தாக்கிய மூன்று பேரையும் கைது செய்யக் கோரி கோஷங்கள் எழுப்பப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் வேளாங்கண்ணி பேரூர் கழக செயலாளர் மரிய சார்லஸ் வேளாங்கண்ணி, பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பி.டி.சார்லஸ், மாவட்டப் பிரதிநிதிகள் மு.பா. ஞானசேகரன், இராம். இளம்பரிதி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டேனியல் சத்யா, தகவல் தொழில் நுட்ப அணி, மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ரெக்ஸ், மாவட்ட வழக்கறிஞர் அணி பூவை ஆர்.ஜி.முருகு, கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பிரமணியன், கீழையூர் குமாரசெல்வம், ஆனந்தகைலாசம் புகழேந்தி, ரபீக் மற்றும் ஜோதிபாசு, செல்வம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கீழையூர் கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வேளாங்கண்ணி பேரூர் கழக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை!

தஞ்சை, ஜூலை 22 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம் இன்று காலை 10.00 மணியளவில் கும்பகோணம் கழகப் பணிமனையில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், இன்று (22.07.2026 - புதன் கிழமை) காலை 10:00 மணியளவில் குடந்தை கழகப் பணிமனையில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க. நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்.

2.கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. கோரிக்கையை ஏற்று ரூ.12.66 கோடியில்

# கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் புதிய சேவை சாலை - நடைமேம்பாலம்!

## தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உத்தரவு!

தஞ்சாவூர். ஜூலை 22 -

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை 36 -ல் நடக்கும் தொடர் விபத்தை தடுக்கும் பொருட்டு மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் விடுத்த தொடர் கோரிக்கையை ஏற்று ரூ.12,66,41,642 மதிப்பீட்டில் புதிய சேவை சாலை மற்றும் சாலையை கடக்க உயர்மட்ட நடைமேம்பாலம் அமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கும்பகோணம் அருகே கோவிலாச்சேரி முதல் கொண்டாங்குடி வரை தேசிய நெடுஞ்சாலை (NH 36 NH45 old) பகுதியில், அரசு பொறியியல் கல்லூரி முதல் மாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வரை மாணவர்கள் தினமும் சாலையைக் கடக்கும் போது தொடர்ந்து விபத்து நடைபெற்று வந்தது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களும், கல்லூரி மாணவ, மாணவியர்களின் பெற்றோர் மற்றும் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் அவர்களிடம் அபாயம் நிலையில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சேவை சாலை அமைத்து விபத்து நிகழாமல் இருக்க ஏதாவது வழி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

மக்களின் உயிர் பாதுகாப்பு பிரச்சினையை உணர்ந்து மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம் தேசிய நெடுஞ்சாலையில் ஆய்வு செய்தார்.

ஆய்வுக்கு பின்னர் புதுதில்லியில் உள்ள நாடாளுமன்ற நிலைக் குழு தலைவர், சாலைப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மேற்கண்ட தேசிய நெடுஞ்சாலையின் அபாய நிலையை சுட்டிக்காட்டி அச்சாலையில் கோவிலாச்சேரி முதல் கொண்டாங்குடி வரை சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய சேவை சாலை மற்றும் கல்லூரி இருக்கும் பகுதியில் மாணவர்கள் பாதுகாப்பாக சாலையைக் கடக்க இரண்டு இடங்களில் உயர்மட்ட நடை மேடை அமைக்கவும் கோரிக்கை வைத்து தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டார்.

அதன் விளைவாக கடும் கவனம் ஈர்க்கப்பட்ட இப்பிரச்சினையை கையிலெடுத்த தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கோவிலாச்சேரி முதல் கொண்டாங்குடி வரை மொத்தம் 2.0 கி.மீ. இடது புறத்தில் சேவைச் சாலை மற்றும் இருசக்கர வாகனங்கள் மற்றும் மாணவர்கள் பாதுகாப்பாக சாலையைக் கடக்க ரேம்புடன் கூடிய நடைமேம்பாலம் , 6 குறு பாலங்கள் அமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கொள்கை அளவிலான ஒப்புதலுக்கு பரிந்துரை செய்துள்ளது.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், அரசு பொறியியல் கல்லூரி, மாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் வசதி ஏற்படும். மேலும் இந்தப் பகுதியில் நடைபெற்று வந்த விபத்துகள் கணிசமாகக் குறையும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்த நீண்டகால பொதுமக்கள் கோரிக்கையை மத்திய அரசின் கவனத்திற்கு தொடர்ந்து எடுத்துச் சென்று திட்டத்திற்கு ஒப்புதல் பெற முக்கிய பங்காற்றிய மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாணசுந்தரம் அவர்களை கல்லூரி மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.



ஈரோடு மாவட்டம் சலங்கைபாளையம் பேரூராட்சி புதிய அலுவலக கட்டிட திறப்பு விழாவில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான தோப்பு என்.டி.வெங்கடாசலம் கலந்து கொண்டு வாழ்த்தினார். நிகழ்வில் சலங்கைபாளையம் பேரூராட்சி தலைவர் மணி மேகலை பழனிச்சாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் பவானி கேப்டன் துரை, பெருந்துறை மேற்கு சோளி பிரகாஷ், ஊத்துக்குளி தெற்கு பிரபு, சலங்கைபாளையம் பேரூர் கழக செயலாளர் பழனிச்சாமி, ஒலகடம் பேரூராட்சி தலைவர் கே.வேலுச்சாமி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஏ.வி. பாலசுப்ரமணியம் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.